கடவுளையே தினம் பணிந்திடுவோம்
காலையில் கல்வியைத் தொடங்கிடுவோம். (கடவுளையே)
நலமுடனே பள்ளி செழித்திடவே
உலகினிலே உயர் வழங்கிடவே
பலவிதக் கலைகள் நாம் பயின்றிடுவோம்
பாரமினே மனதில் நினைந்திடுவோம் (கடவுளையே)
கடமைகளை நாம் உணர்ந்திடுவோம்
கருத்துடன் ஆசான் சொல் நினைத்திடுவோம்
மடமைகளை நாம் மறந்திடுவோம்
மகிழ்வுடன் தேசத்திற்கு உழைத்திடுவோம் (கடவுளையே)
மாதா பிதா குரு தெய்வ பயம்
மனதில் எண்ணி இருப்பதுவே நயம்
தீங்காய்ப் பாவங்கள் புரிந்திடாமல்
தினமும் காத்துமே நடந்திடுவோம். (கடவுளையே)

RangaRakes tamilnavarasam.com

Song

இமய முதல் குமரிவரை எமது இந்தியா
எங்கும் புகழ் தாங்கி வளம் பொங்கும் இந்தியா
அமரர்களும் அவனியிலே பிறந்த இந்தியா
அருந்தலைவர் காந்தி தம்மை அளித்த இந்தியா
முப்புறமும் கடல் சூழ்ந்த ஒப்பில் இந்தியா
முடியெனவே மலையணிந்த வடிவம் இந்தியா
எப்புவிக்கும் இன்பம் அளிக்கும் இணையில் இந்தியா
எவ்வுயிர்க்கும் இன்பம் அளிக்கும் ஈடில் இந்தியா
கங்கைநதி யமுனையோடு காவிரி பாயும்
தங்கம் வெள்ளி தானியங்கள் விளையும் இந்தியா
வங்கஇங்க சுபாசந்திர போஸினைத் தந்த
மங்காத ஒளிமிகுந்த வடிவம் இந்தியா
எமது இந்தியா! எமது இந்தியா!! எமது இந்தியா!!!

RangaRakes tamilnavarasam.com

Song

வாள்முனையின் சக்தியினில் உலகை ஆளுவோம்
அதன் வலிமையினால் பகையை வீழ்த்தி வாகை சூடுவோ
வெற்றி வாகை சூடுவோம்.

அரசாளும் சக்தி யாவும் எங்கள் வீர வாழ்வுக்கே
இந்த ஆண்மை யேது உலகிலே எழுது கோழைக்கே
ஏழை எழுது கோழைக்கே.

அரை கோடியின் ஆண்டியையும் அரசனாக்குவோம்
மக்கள் அடிமை வாழ்வை போக்கி நாட்டின்
விடுதலை காணுவோம்.

எழுதுகோலின் சக்தியாலே உலகை யாளுவோம்
என்றும் அழிவில்லாத கலைகளினால் மக்கள் அறிவை
வளர்ப்போம் மக்கள் அறிவை வளர்ப்போம் (வாள்

RangaRakes tamilnavarasam.com

Song. (குழுப் நடனம்)

ஓ ஓ ஓ தோழர்களே
ஓ ஓ ஓ தோழர்களே
வணக்கம் வணக்கம் வளம்பெருகும் இந்தியாவில்
பிறந்த பெருமையே நமது உரிமையே ஓ ஓ
சாதிபேதம் இன்றியே சண்டையின்றியே
சமரசமாக நாமே சேர்ந்திருவோமே
வெட்டியாக கூட்டமாக வம்பு பேசாமல் வேலை நாடுவோம்
மாட்டை அழைத்து கட்டியே ஏரில் பூட்டியே
வளம் பெருகும் ஆற்று நீரைப் பாய்ச்சிடுவோமே நாம்
விதவிதமாய் விதைகளையே மண்ணிலே தூவியே
தண்ணீரைப் பாய்ச்சுவோம் (ஓ.. ஓ.. தோழர்களே)
வளர்ந்த நாற்றைப் பிடுங்கியே வயலில் ஊன்றியே
வளம் பெறும் ஆற்று நீரைப் பாய்ச்சிடுவோமே
நெல் வளர்ந்து கதிர் சாய்ந்து வளர்ந்த
விநோதம் ஆகா பிரமாதம் ஓ.. தோழர்களே
அறுவடைக்கே நாம் செல்வோமே
கதிர் அறுத்தே நாம் செல்வோமே
ஆணும் பெண்ணும் ஒன்றுக்கூடி ஆடிப்பாடி
நன்றிகளே

RangaRakes tamilnavarasam.com

பெருக் கொன்றாய் கட்டிக் கொண்டு
களத்தில் சேர்ப்போமே — ஓ ஓ ஓ தோழர்களே.

Song

அன்பின் வடிவம் ஆண்டவனே
அன்பர் மனதில் தாண்டவனே

அநுபல்லவி

எண்ணும் எழுத்தும் உடையோனே
எங்கும் நிறைந்த தொழிலோனே
மண்ணித் திலகும் சரணம் பதம் அருள்வாய்
மடமை அகற்றி மதி அருள்வாய்
என்னைப் பிணிகள் எய்தாமல்
இறைவா கருணை புரிவாயே.

RangaRakes
tamilnavarasam.com

## சுப்பிரமணிய பாரதியார் பாடல்

ராகம்: சாமா　　　　　　　　தாளம்: ஆதி.

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்
(தாயின் மணிக்கொடி)

சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கில் எழுதித் திகழும் செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்
(தாயின் மணிக்கொடி

2. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந் திருக்கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்
(தாயின் மணிக்கொடி)

RangaRakes　　tamilnavarasam.com

Song.

ராகம்: மோகனம்  தாளம்: ஆதி

தொண்டுசெய் தொண்டுசெய் தொண்டுசெய்

1. பயிர் செழிக்கப் பால் செழிக்கப்
பண்ட மாற்று செழிக்கவே
உயிர் செழிக்க மனை செழிக்க
உலகு செழிக்க தொண்டுசெய் — (தொண்டுசெ
நெற்றி வேர்வை சொட்டவே
நிலங்கனிந்துக் கொட்டவே
சுற்றம் உன்னை வாழ்த்தவே
சுறுசுறுப்பாய் தொண்டுசெய் (தொண்டுசெ

2. வடக்கு தெற்கு கிழக்கு மேற்கு
மன விகாரம் இன்றியே
அடக்கு முறையும் அகந்தைப் பேயும்
ஆசை வெறியும் இன்றியே
பட படப்பில்லாமலே
பயந்து சோர்ந்திடாமலே
துடி துடிக்கும் அன்புடன்
துணிந்த வீரத் தொண்டுசெய் — (தொண்டுசெ

RangaRakes tamilnavarasam.com

3. உள்ளும் புறமும் கள்ளமின்றி
உண்மை யறிவு பொலியவே
பிள்ளை போல வஞ்ச மின்றி
பேசிப் பழகி கலந்திடு
வஞ்சமற்ற நெஞ்சுடன்
வறுமையற்ற தொழிலுடன்
பஞ்சமற்று வாழ்ந்திட நீ
பாடுபட்டு தொண்டு செய் (தொண்டு செய்)

RangaRakes tamilnavarasam.com

Song

அடிக்கும் பந்து பார் பார்
ஆடும் பம்பரம் பார் பார்
பறக்கும் குருவி பார் பார்
பச்சை மாங்காய் பார் பார்
சிரிக்கும் பாப்பா பார் பார்
சின்ன பூனை பார் பார்
கதர்க் கொடியைப் பார் பார்
காந்தித் தாத்தா பார் பார்.

RangaRakes tamilnavarasam.com

Song II கிரேடு. அழ. வள்ளியப்பா பாடல்.

நெல்லுக்கின்னே அரிசி இருக்கு சொல்லாதே
நெருப்புக்கின்னே சூடு " "
சொல்லுக்கின்னே பொருள் " "
சோத்துக்கின்னே சத்து " "
பாட்டுக்கின்னே இசை " "
படித்துக் கின்னே நீதி " "
காட்டுக் கின்னே மரம் " "
கடலுக்கின்னே உப்பு " "
பூமிக்கின்னே நீர் " "
பூவுக்கின்னே தேன் " "

RangaRakes tamilnavarasam.com

Song. கோலாட்டம் (அல்) கும்மி.

1. மின்னும் ஓடிப் பறக்குதம்மா – ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று – செல்லுதம்மா
மாட் இடையில் உள்ளம் மூழ்குதம்மா

2. முல்லை மலர்ப் பந்தலிட்டனரோ – தேவ
முத்து விதானம் அமைத்தனரோ
வெல்லும் மதியின் திருமணமே – அவன்
விண்ணில் விழா வரும் வேளை இதோ

3. சின்னஞ் சிறு பிறையாய் காணுதம்மா – பின்னர்
செம்பொற் குடம் போல தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா – இதோ
இந்திர சாலமோ கூறுயம்மா

4. வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா
வட்டம் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா
சற்றும் தெரியாமல் ஆகுதம்மா

5. கண்ணுதலுள்ளக் கருணை அதோ கொற்கை
காவலர் கண்ட புகழ் அதுவோ
மண்ணகம் செய்திடும் புண்ணியமோ – இன்று
வானகம் வந்து நிலவுதம்மா.

RangaRakes tamilnavarasam.com

1. சின்ன சின்னப் பூவெடுத்து சித்திரம்போல் மாலை கட்டி
பின்னலிலே தொங்க விட்டாள் கன்னிக் குயிலி வந்தாள்
பின்னலை வந்து ஆடுகின்றாள் — கன்னி மயிலே

2. கண்ணிமைகள் தாளமிட காலச் சலங்கை ஓசையிட
சின்னழகைக் காட்டி நின்றுகே — கன்னக் குயிலி — வந்து
முன்னே வந்து ஆடுகின்றாள் — கன்னி மயிலே
முத்து நகை பொங்கவா — முக்கனியின் சாறெடுத்து
தித்திப்பு விருந்து வைத்தாச்சு கன்னக்குயிலி — நான்
தின்னும் போது தட்டி விட்டாச்சு — கன்னி மயிலே
பொன் முகிலின் மின்னல் ஒன்று வந்து விளையாடுதல் போல
தேன் உருவில் துள்ளி வந்தாள் — கன்னிக் குயிலே
நாணத்துடன் பார்த்து நின்றாள் — என்னைப் போலே கன்னி மயிலே
காலம் எல்லாம் காணுமலே — காவியத்தின் கற்பனையை
நீளமாகச் சொல்லிவிட்டாள் — கன்னிக் குயிலி
கோலத்தை என்ன சொல்வேன் — கன்னி மயிலே
பொன்றுருகினை போடி.

RangaRakes tamilnavarasam.com

வகை. கும்மிப்பாடல்   நாட்டுப் பாடல்.

1. நாலு மூலை வயலுக்குள்ளே
ஏலே வாங்கடி அன்னமே
நாற்று நடும் கூழைப் பெண்ணு
ஏலே வாங்கடி அன்னமே.

2. ஒடுங்கு கொடுங்கா மூங்கில் வெட்டி
ஏலே வாங்கடி அன்னமே
வண்டிக்கு பின்னாலே
ஏலே வாங்கடி அன்னமே
வந்து விளையாடை பிள்ளே
ஏலே வாங்கடி அன்னமே

3. பந்தலுக்குப் பின்னாலே
ஏலே வாங்கடி அன்னமே
பந்து விளையாடை பிள்ளே
ஏலே வாங்கடி அன்னமே.

RangaRakes   tamilnavarasam.com

Song. கும்மிப் பாட்டு

1. கன்னிக் காவேரி அம்மா - எங்களைக்
காத்து வட்டிப் பாயம்மா

2. மண்ணை நம்பி வாழும் - கிராமத்து
மக்களைக் காத்திடுவாய்
கன்னியின் பொன்னுருகி - நிலத்தில்
தங்கி வளம் செய்வாய்

3. கொற்றுவைப் பூவும் - கொண்டையில்
குலுங்கிட நீ வருவாய்
கொத்துக் கொத்தாய் நெல்லைக் கதிரில்
குலுங்க வைப்பாயம்மா
ஆடி பதினெட்டிலே உன்னையே
அண்டியே நம்பிருவாய்
பாடிக் குதித்து வந்து - எங்களின்
பாவம் தொலைத்திடுவாய்.
ஜலம் பெருக வேண்டும் - உன்னைப் போல்
வளம் பெருக வேண்டும்
நிலம் செழிக்க வேணும் - மக்களின்
நலம் கொழிக்க வேணும்.

RangaRakes tamilnavarasam.com

Song. நடனம்.

மங்காமல் வளரும் ஆதாரக் கல்வி
பாங்குடன் கற்றே மகிழ்வோம்
பாமர மக்கள் உயர்ந்திட வேண்டி
அமரகவி போல் உழைப்போம்
ஜில் ஜில் என்றே ஆர்வமுடன்
ராட்டையை சுற்றி முடிப்போம்
காந்திஜி நாமம் வாழ்க வென்றே
களிப்புடன் உழைத்திடுவோமே.
கிராம சேவையைக் காண்பவர் அனைவரும்
வியப்புடன் நோக்கிடுவாரோ (மங்காமல்)
ஆசிரியர் கல்வியே அருங் கல்வி என்று
உலகுக்கே உரைத்திடுவோமே
ஆசிரியப் பணி அரும்பணி என்று
அனைவரும் அறிந்திடுவாரே
தன்னை மற்றும் பொதுநலங் காக்கும்
கல்வியை வளர்த்திடுவோமே
வருங்கால பிரஜைகளை உருவாக்க வேண்டி
கடமையை ஏற்றிடுவோமே.

RangaRakes tamilnavarasam.com

துப்புரவுடன் செம்மையாய் நாடி
வழிகளை வகுத்திடுவோமே.
கொட்டையை நூற்று விசனம் அற்று கைத்தறி
பாடக் குறிப்பை பரப்புடன் எழுதி நெய்திடுவோமே
ஆடிப் பாடி ஓடும் மாணவர்களைக் கற்பித்து
அன்புடன் அழைத்தே செல்வோமே. ஆயிரங் கடமை
அன்புடன் ஆருந் திறமையை அடையார்.

RangaRakes tamilnavarasam.com

'நிலவே நிலவே ஆட வா' என்ற மெட்டு. Song.

1. வளமாய் வளமாய் வாழ்கவே
வாழ்க பாரதம் வாழ்கவே
அழகாய் அணியாய் வணங்கிடுவோம்
அன்னையின் மணிக்கொடி வாழ்த்திடவே.

2. ஐந்தாண்டு யாவும் அதிசயமே
அனைவரின் வாழ்வை அது தருமே
ஐயா அம்மா அருந்தமிழ் அனைவீர்
அஞ்சாமல் வேலைகள் ஆற்றுவோம்.

3. மண்ணை உழுது பயிர் செய்வோம்
மகிழ்ந்தே உண்டு களித்திடுவோம்.
கண்ணும் கருத்துடன் கலை பயில்வோம்
கைராட்டையால் நூற்பதைக் காண வா.

RangaRakes tamilnavarasam.com

[illegible] சுதந்திரப் பாட்டு — கோலாட்டம்

சுதந்திரமாம் திருநாளில் பெரு மகிழ்வு பொங்கிட
சோதரிகள் சேர்ந்து நாமும் கொண்டாடுவோம்.
ஆ.... ஆ.... ஆ.... ஆனந்தமே.
அறநெறியில் மன்னர்கள் தம் ஆட்சியிலே சிறந்திருந்த
அமராவதி பலவையுமே ஆதரித்த அற நாடு
ஆ.... ஆ..... ஆ..... ஆனந்தமே.
ஐந்தாண்டுத் திட்டங்களை ஆக்கித் துன்பம் நீக்கி எங்கும்
இன்பம் தங்கி செல்வ வளம் செறிந்திடும் நம் நாடு.
அந்நியர்கள் ஆட்சிதனை அகிம்சையாலே வெறுத்த
அருந்தவச் சுடர் காந்திமகான் அவதரித்த நாடு.
பொங்கும் நதி பல விளைந்த
பொற்குவியல் மிகு நாடு
எங்கும் ஒளி பரவி நிற்கும்.
கதிரவன் போல் ஒளிர் நாடு
மங்காப் புகழ் பெற்ற பல
தலைவர்களைத் தரும் நாடு
மங்கையர் பலர் வீரச் செயல் புரிந்திலங்கும்
புகழ் நாடு ஆ.... ஆனந்தமே.

RangaRakes tamilnavarasam.com

பாரதமாம் நம்நாடு பாரினிலே உயர்ந்திடவே
பாங்குடனே முயற்சி செய்து பாடுபட விரைந்திடுவோம்
பக்தியிலே சிறப்பான சத்தியர்கள் பலருடைய
நித்திய நல் வாழ்வினிலே
நிறைவு கண்ட பெருநாடு
ஆ... ஆ... ஆனந்தமே.

RangaRakes tamilnavarasam.com

Song 'ஆனை ஆனைப் பார்க்கிறார்' என்ற மெட்டு (நடனப் பாட்டு)

'ஆடும் எங்கள் பாக்கியமே!

மன்னாதி மன்னன் முன்னால் ஆடும் எங்கள் பாக்கியமே
ராஜாதி ராஜன் முன்னால் ஆடும் எங்கள் பாக்கியமே
பகைவரைக் கண்டால் இவர் புலிபோலப் பாய்ந்திடுவார்
பற்பல நாடுகளை வென்று வாகை சூடிடுவார்
பாரத நாட்டினிலே போற்றும் மன்னர்தாம் இவர்.
குடிமக்கள் நலத்தினிலே நாட்டம் மிகக் கொண்டிடுவார்
குற்றமேதும் கண்டிடினும் குறை நீக்கி நீதி சொல்வார்
இப்பையர் இன்றிடாமல் காக்கும் மன்னர்தாம் இவர்.
வாழி எம் வேந்தர் என்றே வையகத்துள் வாழ்ந்திடவே
வளர்பிறை திங்கள் போல புகழ் பெற்றே வாழ்க என்றே
பண்கள் இசைந்து என்றும் பாரினிலே வாழ்கவே (ஆடும்).

RangaRakes tamilnavarasam.com

Song 'கொஞ்சிக் கொஞ்சிப் பேசி' என்ற மெட்டு.

1. பாரத நாட்டைப் பாடிடுவோம்
பாரினில் உயர்வைத் தேடிடுவோம்
சட்டங்கள் நலமுடன் நாட்டிடுவோம்
திட்டங்கள் பலவுடன் வகுத்திடுவோம்
கஷ்டங்களை நீக்கி இஷ்டமாக வாழ
இறைவனை அனுதினம் போற்றிடுவோம். (பாரத)

2. கல்வி கலைகளை உயர்த்திடுவோம்.
காப்பியம் பலவும் படித்திடுவோம்
காந்தி பாரதி ஔவைப் பிராட்டியும்
காட்டிய வழியினில் சென்றிடுவோம்.

3. வயல்கள் பசுமை பெற்று வளர்ந்திடவே
கதிர்கள் நிறைந்து பஞ்சம் நீங்கிடவே
பொங்கி ஆறும் ஓட புதுமை பொழிந்திட
சோலையில் குயில்கள் கூவிடவே (பாரத)

4. கண்ணில் சிறந்த கல்வி கற்றிடுவோம்
பண்ணில் இன்பம் கண்டு நல்ல தினம்-கொண்டு
நாட்டினை நலம்பெறச் செய்திடுவோம். (பாரத)

RangaRakes tamilnavarasam.com

Song ராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

அருணகிரி நாதர் பாடல்.

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்று
ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்று
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வைத்த முகம் ஒன்றே
ஆறு முகமான பொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே !

RangaRakes tamilnavarasam.com

Song 'பாலும் பழமும்' என்ற மெட்டு.

ஏடும் நூலும் இருகை ஏந்தி
எழிலே ஆடும் வார்த்தைகள் சிந்தி
ஆடும் சிலைபோல் நீ வருவாயே
அழகு நிலவே பள்ளி செல்வாயே
கல்விச் சிறப்பைக் கண்டிடுவாயே
காலம் அழிக்கா செல்வ மென்பாயே
கண்ணின் இமைபோல் காத்திடுவாயே
கன்னித் தமிழை கற்றிடுவாயே
கொஞ்சும் மொழியில் அறிவுரைப்பாயே
கோபக் கனலை நீ அழிப்பாயே
அஞ்சி நடக்கும் நடை பயில்வாயே
அழகு நிலவே பள்ளி செல்வாயே
கற்ற கல்வி அழிவது இல்லை
காலம் என்றும் தீர்ப்பது இல்லை
கடமை என்றே அதனைக் கேற்பாயே
காவிய அழகே பள்ளி செல்வாயே (ஏடும் நூலும்

RangaRakes tamilnavarasam.com

# சரஸ்வதி பாட்டு

வாணி வந்தருள் புரிவாய் பாதம் பணிந்தேன்
வாணி வந்தருள் புரிவாய்
வாணி வீணாபுத்தக பாணி பிரமன் பதி
வாணி நித்திய கல்யாணி எந்தன் மனதில் (வாணி)
கற்றிடும் சிறியவர்க்கும் கற்பிக்கும் பெரியோர்க்கும்
கற்பகம் போல நற்கல்வி பெருகவே (வாணி)

RangaRakes tamilnavarasam.com

Song.

1. கட்டை விரல் நானே ராஜா
காசு சின்னப் பார்ப்பேன்
கடிதம் பிடித்து எழுதிடவும்
கருத்துப் பேணி பிடிப்பேன்

2. இரண்டாம் விரல் நானே ராஜா
எதுவும் சுட்டிக் காட்டி
எதையும் என் உதவியின்றி எதுவும் நடவாது.

3. மூன்றாம் விரல் நானே ராஜா
முன் நிறுத்திப் பாரும்
மூத்தவனும் நடு நாயகனும்
நானே அதற்கு உரியவனும்

4. நான்காம் விரல் நானே ராஜா
நடுவுடனே பாரும்
நவரத்தின மோதிரங்கள்
அணிபவனும் நானே

5. ஐந்தாம் விரல் நானே ராஜா
அதனை எண்ணிப் பாரும்
ஆதி பகவானைத் தொழுவதற்கு
முன் நிற்பவனும் நானே.

RangaRakes tamilnavarasam.com

Song (கும்மிப் பாட்டு)

நாலு புறத்திலும் கோபுரமாம் - அதில்
நடுவே உள்ளது தெப்பக் குளம்
காலோர் ஆயிரம் கொண்டொரு மண்டபம்
கட்டியிருக்குது பாருங்கடி.
சப்பரம் போல தொப்பைக் கணபதி
எப்ப வருவாரோ பாருங்கடி
விண்ணை முட்டிடும் கோபுரமாம் - அதில்
விதவித மான சிற்பங்களாம்.
கண்ணைக் கவரும் வேடிக்கை பார்த்திடக்
கண்கள் ஓராயிரம் வேண்டுமடி.

RangaRakes tamilnavarasam.com

Song: ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி.

சூரியன் வருவது யாராலே
சந்திரன் திரிவது எவராலே
காரிருள் வானில் மின்மினி போல்
கண்ணில் படுவன அவை என்ன
பேரிடி மின்னல் எதனாலே
பெருமழை பெய்வது எவராலே
ஆரிதற் கெல்லாம் அதிகாரி
அதைநாம் எண்ணிட வேண்டாமோ.
அல்லா என்பர் சில பேர்கள்
அரன் அரி என்பார் சில பேர்கள்
வல்லான் அவன் பரமண்டலத்தில்
வாழும் தந்தை என்பார்கள்
அந்தப் பொருளை நாம் நினைத்து
அனைவரும் அன்பாய் கூவிடுவோம்
வந்திப்போம் அதை வணங்கிடுவோம்
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

RangaRakes tamilnavarasam.com

Song

எலியும் தவளையும் வெகு இஷ்டமாய் மனம்
கலந்து வாழும் காலும் கையும் கயிற்றால் கட்டிக் கொண்டன
கட்டிக் கொண்ட பின் அவை களித்துத் திரிகையில்
கிட்ட இருந்த குளத்தில் தவளை கிளம்பிக் குதித்தது
திக்கு முக்கிற்று எலி செத்து மிதந்தது.
பக்கம் இருந்த பருந்து ஒன்று
பாய்ந்தே எலியைத் தூக்கிச் செல்கையில்
அதில் தொங்கும் தவளையும்
போக்கில்லாமலே பருந்தினாலே புசிக்கப் பட்டது.
யாரும் இதனால் மிக எளிதில் உணரலாம்
கூடா எண்ணத்தவர் சிநேகம்
செய்யும் தீங்கென்று (எலியும் தவளையும்)

RangaRakes tamilnavarasam.com

Song

ராகம்: காபி                                    தாளம்: ஏகதாளம்

பாரதத்தின் பெருமை கண்டு
பண்பு கொள்ளுவோம் – மன
தீரமுடன் சேவை செய்து
வெற்றி காணுவோம்
சேர சோழ பாண்டியர்தன்
போற்றி வளர்த்த – தமிழ்ச்
சிறப்புறவே கலை பயின்று
பெருமை சொல்லுவோம்
அன்பு கொண்டு அறம் வளர்த்து
ஆவன செய்வோம் – மக்கள்
துன்பம் நீக்க இன்பம் பொங்க
நண்பராகுவோம்
நம்பிக்கையும் நாணயமும்
நாட்டில் ஊட்டுவோம் – பொது
நலமே நமது லட்சியமென
உறுதி கொள்ளுவோம்:

RangaRakes tamilnavarasam.com

Song (நடைப் பாட்டு)

கதிரவன் உதயங் கண்டு
கமலங்கள் முகம் மலரும்
நதித் தடங்கள் நீராடும்
நங்கையர் குடங்களுடன்
கலகல வென்னும் பலவித வொலியுடனே
சகல உலகும் மிக குதூகலமுடனே
கூடுவோம் பரமன் அருள் புகழ்ந்து பாடுவோம்
மகிழ்ந்து துள்ளி விளையாடுவோம்
இளங் கன்றின் குரல் கேட்டு
கனிந்து வரும் பசுவைப் போல
அன்பு சுரந்த மனிதரைக் காணுவோமே.

RangaRakes tamilnavarasam.com

Song கும்மிப் பாட்டு

1. மங்கையராகப் பிறப்பதற்கே — நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா
மங்கையர் கை நலம் பார்த்தல்லவோ — இந்த
பாரின் அறங்கள் வளருமம்மா

2. அல்லும் பகலும் உழைப்பவ ராவர் — உள்ளத்து
அன்பு ததும்பி எழுப்பவராய்
கல்லும் கனியக் கசிந்துருகித் — தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவராய்

3. உறக்கம் உடைத்திடும் ஏழைகளைக் காணில்
உள்ளம் உருகித் துடிப்பவ ராவர்
காக்கவே நோயாளி அன்னையிலே — இரு
கண்ணிமை கொட்டா திருப்பவ ராவர்

4. உள்ளத் தளர்வுறும் நேரத்திலே — உயிர்
ஊட்டம் உரைகள் உரைப்பவராவர்
அள்ளி யெடுத்து மடியிலிருத்திட — மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவ ராவர்

5. அன்பிற்காகவே வாழ்பவர் யார் — அன்பின்
ஆழியும் போக்கத் துணிபவர் யார்

RangaRakes tamilnavarasam.com

அன்பு உரைகள் தருபவ ளார் - வீட்டை
அன்னைக யாளொளி செய்பவ ளார்

6. மங்கையராகப் பிறந்ததினால் - மனம்
வாடித் தளர்ந்து வருந்துவதேன்
தங்கு புவியில் வளர்த்திடும் கற்பகத்
தாருவாய் நிற்பதும் நீஏ~~ய~~ல்லவோ

RangaRakes tamilnavarasam.com

Song. டான்ஸ்.

படையாமல் உண்ணுகுத தமிழ்நாடு வாழ்க!
பகை யாகும் எண்ணுகுத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவை வந்த போதும்
அநியாயம் எண்ணுகுத தமிழ்நாடு வாழ்க!
கொல்லாமை உயர்வெனும் தமிழ்நாடு வாழ்க!
கொடை வள்ளல் பலர் நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க!

RangaRakes tamilnavarasam.com

Song கும்மி (or) கோலாட்டம்

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் " " "
கடுமை கொண்ட தோளினாய் " " "
தெளிவு பெற்ற மதியினாய் " " "
சிறுமை கண்டு பொங்குவாய் " " "
எளிமை கண்டு இரங்குவாய் " " "
ஏறுபோல் நடையினாய் " " "
இளைய பாரதத்தினாய் " " "
எதிரில்லா வலத்தினாய் " " "
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதயனாய் இருப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே முன்போல
கலை இறக்க வந்தனை வா வா வா
விளையும் மாண்பு யாவையும் பார்த்தன் போலே
விழியினால் விளக்குவாய் வா வா வா.

— ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்.

RangaRakes tamilnavarasam.com

Song: நடனம்: 'வாராயோ வெண்ணிலாவே'

பாரோர் கொண்டாடும் நாடு
சீரோங்கும் நமது நாடு.... (பாரோர்)

1. நில்வளம் நீர்வளம் நிறைந்து – பல
நீதிமிக சிறந்த நம்நாடு
பலபல மொழிகளின் இனிமை
பரவி வாழ்ந்திடும் நாடு (பாரோர்)

2. மலைகள் நிறைந்த நம் நாடு – பல
நதிகள் சிறந்த நம் நாடு
விளைபொருள் மலிந்த நம்நாடு – பல
கலைகள் சிறந்த பொன்னாடு. (பாரோர்)

3. சுதந்திரம் என்றே பாடி
சொல்லுவோம் ஜெய்ஹிந்த் என்றே
அண்ணல் காந்தியைப் போற்றி – தினம்
அஞ்சலி செய்குவோம் எந்நாளும் – இது (பாரோர்)

RangaRakes tamilnavarasam.com

Song: 'பக்கத்திலே' என்ற மெட்டு.

பள்ளியிலே சபையோரிருக்க - கண்
பார்வை போடுதே இன்று
பள்ளியிலே பல நலனிருக்கு - உங்க
உழைப்பினிலே அதன் உயர்விருக்கு
நீங்களிருக்கும் போது பயமெதுக்கு - எங்க
எண்ணமெல்லாம் உங்க மேலிருக்கு.
படிப்பினிலே உண்டு பல தினுசு - அதை
அறியாமலிருப்பது மிகத் தவறு
நெஞ்சினிலே பல நினைவிருக்கு - அதில்
நேர்மையும் பெருமையும் கலந்திருக்கு
நிம்மதியாய் நாமும் வாழ்வதற்கு - நல்ல
சோறும் இடமும் கிடைத்திருக்கு
கடமையும் பணிவும் கலந்திருக்கு - அதில்
கனிவும் அன்பும் நிறைந்திருக்கு. (பள்ளியிலே)

RangaRakes tamilnavarasam.com

Song

கோலாட்டப் பாட்

முத்துப் பவள மணியிழைத்த
தேரைப் பாரடி - அதில்
மெதுவுடன் செல்லும் அந்த
மனிதர் யாரடி
எத்திசையும் புகழ் மணக்கும்
பாரி தானடி - அவர்
இல்லையென்றே சொல்லி விடாத
வள்ளலாமடி
சாலையோரம் அந்தத் தேரும்
நிற்ப தேனடி
சட்டென்றவரும் கீழ் இறங்கி
பார்ப்ப தென்னடி
மாலைக் காற்றில் ஆடி அசையும்
முல்லைக் கொடியடி - அது
மயங்கிடாமல் வாழத் தேரை
வழங்கினாரடி
முல்லைக் கொடிக்குத் தேரைக் கொடுத்த
வள்ளல் பாரிபோல் - உலகில்

RangaRakes
tamilnavarasam.com

முழுதும் நல்ல மனிதர் ஒருவர்
உண்டோ சொல்லடி.
இல்லை இல்லை இல்லை என்றே
சொல்லுவோமடி - நாம்
எங்கு தேடிப் பார்த்திட்டாலும்
கிடைத் திராதடி.

RangaRakes tamilnavarasam.com

Song

1+1=2 ஜப்பான் காரன் குண்டு

2+1=3 அய்யா வீட்டுத் தூணு

3+1=4 கருப்பு நாயின் வாலு

4+1=5 பாட்டி தலை பஞ்சு

5+1=6 கோட்டில் தொங்கும் தாறு

6+1=7 அம்மா போடும் கோடு

7+1=8 பாட்டி சட்டை பட்டு

8+1=9 பாட்டி வெற்றிலை தின்பது

9+1=10 முதுகில் ஒரு குத்து

RangaRakes tamilnavarasam.com

கதை நாய்க்குட்டி

தோ.... தோ.... நாய்க்குட்டி

துள்ளி வா வா நாய்க்குட்டி

உன்னைத் தானே நாய்க்குட்டி

ஓடி வா வா நாய்க்குட்டி

RangaRakes tamilnavarasam.com

1. தன்னை தினம் தினம் தன்னை தினம்
தினம் தன்னை தினம் தன்னை தினம் தன்னை தினம்
ஆனைமலை வானகிலமலை
கொடைக்கானல் மலை உண்டு இந்த நாட்டிலே (த)

2. மயா மைசூர் அணை மேட்டூர் அணை
லோயர் பவானி உண்டு இந் நாட்டிலே

3. காவேரி பாலாறு பெண்ணை உண்டு
தாமிரவருணி வைகையாறு

4. காயோடு கிழங்கு கனி நாட்டில் உண்டு.
காணகத்து வண்டுண்ணும் தேனும் உண்டு.

RangaRakes tamilnavarasam.com

அம்மா பெண்ணே தும்பைப் பூவே
ஆம்படையான் வந்தால் என்ன செய்வாய்
கட்டி வெல்லம் புட்டு வைப்பேன்
கறந்த பாலை காய்ச்சி வைப்பேன்
பாலும் சோறும் போட்டு வைப்பேன்
உண்ண உண்ண சோறு வைப்பேன்
பட்டுப் பாயை விரித்திடுவேன்
பக்கத்தில் இருந்தி பேசிடுவேன்

RangaRakes tamilnavarasam.com

# பாட்டுக் கச்சேரி.

i. பாட்டுக் கச்சேரி - இங்கே
பாட்டுக் கச்சேரி
கேட்க வாருங்கோ ஜோராய் கேட்க வாருங்கோ

ii வெங்கு பாடுகிறான் - சும்மா
வெளுத்துக் கட்டுகிறான்
தகர டப்பாவிலே - பாலு
தவிலு அடிக்கிறான்

iii சாப்பிச் செம்பிலே கண்ணன்
கடம் அடிக்கிறான்
வாக்கிங் ஸ்டிக்கிலே - பட்டு
வயலின் வாசிக்கிறான்

iv மொட்டைக் கத்தியிலே - ராஜு
மோர்சிங் வாசிக்கிறான்

v தகிட தகிட தோம் - தகிட
தகிட தகிட தோம்.
கேட்க வாருங்கோ - ஜோராய்
கேட்க வாருங்கோ

RangaRakes tamilnavarasam.com

Song கிழமைப் பாட்டு

ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்
திங்கட் கிழமை திருடன் கிடைத்தான்
செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்கிப் போனான்
புதன் கிழமை புத்தி வந்தது
வியாழக் கிழமை விடுதலையானான்
வெள்ளிக் கிழமை வீட்டுக்கிப் போனான்
சனிக் கிழமை சாப்பிட்டுப் படுத்தான்
(அப்புறம் அவன் கதை) அடுத்தத் தெரியும்.

RangaRakes tamilnavarasam.com

கதை என்ன செய்யலாம்?

செத்த மாட்டுத் தோலினால்
செய்யலாமே செருப்புகள்
செத்த ஆட்டு மயிரினால்
செய்யலாமே கம்பளி
செத்த எருமைக் கொம்பினால்
செய்யலாமே சீப்புகள்
செத்த யானைத் தந்தத்தால்
செய்யலாமே பொம்மைகள்
செத்த பாம்புத் தோலிலும்
செய்யலாமே பைகளை
செத்த மனிதன் உடலிலே
செய்ய என்ன உள்ளதே
செருப்பு கூடத் தைத்திட
தீண்டுவோரும் இல்லையே.

RangaRakes tamilnavarasam.com

Song தீபாவளி

காலைக் கோழி கூவும் முன்னே
கண்ணை விழித்துக் கொள்ளலாம்
எண்ணெய் தேய்த்து முழுகலாம்
பட்டணத்தில் வாங்கி வந்த
பட்டு ஆடை எடுக்கலாம்
கட்டிப் பார்த்து மகிழலாம்
பட்சமான அப்பாவிடம்
பட்டாஸ் கட்டு வாங்கலாம்
சுட்டுச் சுட்டுத் தீர்க்கலாம்
தருவாள் அம்மா பட்சணங்கள்
தட்டு நிறைய வாங்கலாம்
பிட்டுப் பிட்டு போடலாம்.

RangaRakes tamilnavarasam.com

Song  என் தெய்வம்

1. அம்மா அம்மா வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே
அம்மா உன்னைக் கண்டாலே
அழுகை ஓடிப் போய்விடுமே

2. பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே
பத்தியங்கள் காத்தாயே
பாடுபட்டு வளர்த்தாயே

3. அழகுமிக்க சந்திரனை
ஆகாயத்தில் காண்பித்தே
பழமும் பாலும் ஊட்டிடுவாய்
பாட்டும் கதையும் கூறிடுவாய்

4. தமிழைக் கற்றுத் தந்திடுவாய்
தத்துப் பித்தெனப் பேசிடினும்
அழகும் அறிவும் என்றிடுவாய்
அணைத்து முத்தம் தந்திடுவாய்

5. எனக்குச் சிறுநோய் வந்தாலும்
ஏனோ மிகவும் வருந்துவாய்

RangaRakes tamilnavarasam.com

உணவும் இன்றி உறங்காமல்
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்
உன்னைப் போல வளர்த்திடுவோர்
உலகில் உண்டோ வேறெவர்
என்னைக் காக்கும் அம்மாவே
எனக்குத் தெய்வம் நீதானே.

RangaRakes tamilnavarasam.com

# [illegible] ரொட்டி.

1. ரொட்டி ரொட்டி ரொட்டியாம்
வெட்டி வெட்டி வெண்ணெயில்
தொட்டுத் தொட்டு வாயிலே
பிட்டுப் பிட்டுப் போடலாம்

2. ரொட்டி என்று சொன்னதும்
மட்டில்லாத ஆசைதான்
சொட்டுதம்மா ஆசைதான்
சொட்டுதம்மா எச்சிலும்
துட்டுக் கெங்கே போவது

3. கிட்ட உள்ள கடையிலே
ரொட்டிகூட விற்குது
துட்டில்லாமல் கிடைக்குமோ
தட்டிடாமல் ஓங்கிடு.

RangaRakes tamilnavarasam.com

Song உண்டு

கரும்பு இருக்கும் இடத்திலே
எறும்பு உண்டு மொய்க்கவே
கண்ணன் தின்னும் உணவிலே
வெண்ணெய் உண்டு முதலிலே
தோசை சுட்டால் சுர்ரென
ஓசை யுண்டு கேட்கவே
மீசை வெள்ளை ஆகியும்
ஆசை உண்டு வாழவே
குட்டையான பையனுள்
கஷ்டம் உண்டு வீட்டிலே
தெம்பில்லாத பாட்டிக்கு
கம்பு உண்டு கையிலே.

RangaRakes tamilnavarasam.com

டில்லிக்குப் போனேன்
நேருவைப் பார்த்தேன்
சலாம் வைத்தேன்
சாக்லேட் தந்தார்

அதோ பார் மைனா
ஆஸ்பத்திரி சொய்னா
எங்கப்பா நைனா
நான் போறேன் சைனா.

RangaRakes tamilnavarasam.com

Song கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்கரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏறும் கப்பலாம்
சாமான் ஏற்றும் கப்பலாம்
சண்டை செய்யும் கப்பலாம்
கப்பல் தன்னில் பலவிதம்
கடலின் மீது திரியுமாம்
தூர தேசம் செல்லுமாம்
துறைமுகத்தில் தங்குமாம்
கலங்கரை விளக்கினைல்
கரையைக் கண்டு சேருமாம்
கப்பல் ஏறி உலகெலாம்
காண வேண்டி ஆசையோ
செல்வதற்கோ அனுமதிச்
சீட்டு எங்கே காட்டு

RangaRakes tamilnavarasam.com

Song 'பட்டணத்தைப் பார்!

பட்டணத்தைப் பார்க்கப் போகும்
இன்ன மாமா – அந்தப்
பையனை நீ மறந்திடாதே இன்ன மாமா
பாப்பாவுக்கு ஊது குழல்
இன்ன மாமா – அந்தப்
பட்டணத்தில் வாங்கி வாராய்
இன்ன மாமா
அக்காளுக்கு எப்பர்வுனா
இன்ன மாமா – அங்கே
அழகழகாய் வாங்கி வாராய் இன்னமாமா
பிரியமுள்ள அம்மாவுக்கு
இன்னமாமா – நல்ல
பொங்கலுக்குச் சேலை வேண்டும்
இன்ன மாமா
அப்பாவுக்குச் சட்டைத்துணி
இன்ன மாமா – ஒர்
ஆறு கைஜும் வாங்கிவாராய் இன்ன மாமா

RangaRakes tamilnavarasam.com

## Song அழகும் விடுதலையும்.

என்னை ஏனோ அழகாக
ஈசன் படைக்க வில்லையென
எண்ணி எண்ணி ஒருகாக்கை
ஏங்கிச் சுற்றித் திரிகையிலே.
கூட்டிலே அழகிய கிளியொன்றைப்
போட்டு அடைத்து ஒருபையன்
வாட்ட வதைக்கக் கண்டதுவே
மனத்தில் வருத்தம் கொண்டதுவே
அழகாய் என்னைப் படைத்திருந்தால்
அடிமையாக்கும் அக் கதிதான்
அழகைக் காட்டிடும் விடுதலையை
அளித்தார் ஆண்டவன் என்றதுவே.

RangaRakes tamilnavarasam.com

Song தாலாட்டு.

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
ஆடா மணியே
திலக்காமல் நின்றெரிடும்
வாடா மலரோ – என்
மரகதமே கண் வளராய்
கற்கண்டு சீனி
கனிவகைகள் எல்லாம் உன்
சொற்களால் நாணடையும்
அகத்திற்கே ஈடாமோ
கால்களை நீட்டி நன்கு
கையைத் தலைக்கு வைத்தும்
பாற் கடலிற் பள்ளி கொண்ட
பத்மநாபன் நீதானோ
தர்மம் குறைகையிலே
தாரணியில் [illegible]
கர்மம் என உரைத்த
கண்ணபிரான் நீதானோ

RangaRakes tamilnavarasam.com

காந்தியின் சொல்லாண்மை
கருணை மிக்க செய்கை என்று
ஆதியத்துச் சோதி
அருமைப் புத்தர் நீதானோ
சத்தியத்தைக் காப்பாற்றும்
தருமவான் காந்தியே போல்
உத்தமனே நீ உதித்தாய்
உலகில் உயர்வடைவாய்.

யான் பெற்ற நற்கிம்மா
கனிமை மழலையினால்
தேனும் செந்தமிழில்
தினமாவும் சேர்த்தனையோ
அப்பா பெயர் ஓங்க
அம்மா உளங் குளிர
இப் பாரில் நீ நடந்து
இன்பமுடன் வாழ்வாயே.

RangaRakes tamilnavarasam.com

# திருக்குறள்.

ஒன்றே முக்கால் அடியாலே
உலகம் தன்னைக் கவர்ந்ததுவாம்
அன்றும் இன்றும் என்றென்றும்
அருமை பெருமை உடையதுவாம்
பன்மொழி களிலும் வெளியாகிப்
பாரில் பரவி நிற்பதுவாம்
பொன்மொழி யாவும் நிறைந்தவொரு
பொக்கிஷமாகத் திகழ்வதாம்
உள்ளம் தூய்மை உற்றிடவும்
உரிய நன்மை பெற்றிடவும்
தெள்ளத் தெளிய உதவுவது
திருக்குறள் திருக்குறள் திருக்குறளே.

RangaRakes tamilnavarasam.com

Song 'சின்னச் சின்னக் குருவி'

சின்னச் சின்னக் குருவி
சிங்காரக் குருவி
சிரிக்கத் தெரியாத
சிட்டுக் குருவி
அழவும் தெரியாத
அழகான குருவி
மரத்தில் கூடு கட்டி
மகிழ்ந்து முட்டை யிட்டு
அருமையாய்க் குஞ்சு பெற்று
அன்பாக வாழ்வாயே.

RangaRakes tamilnavarasam.com

பாலைக் காய்ச்சினால் ஆடையாம்
மக்கள் உடுப்பது ஆடையாம்
பங்குனி பிறந்தால் கோடையாம்
இறைவன் முடைவது சடையாம்
நாட்டிய மாடுவது மேடையாம்
படையின் முழக்குவது முரசு
மன்னன் ஆளுவது அரசு
விளையாத நிலமே தரிசு
மேலோர் பெறுவதே பரிசு

RangaRakes tamilnavarasam.com

தொகு சிறுவர் பாட்டு

அ ஆ அணில் ஆடு
அழகாய் அதனை நீ பாரு
இ ஈ இலை ஈட்டி
எழிலாய் நட நீ கைநீட்டி
உ ஊ உரல் ஊசி
உள்ளம் மகிழ நீ வாசி
எ ஏ எலி ஏணி
ஏற்றம் இறைக்கும் நீர்க்கேணி
ஒ ஓ ஒட்டகம் ஓர் ஓடம்
உண்மை உரைப்பது நூற்பாடம்
ஐ ஔ ஐயர் ஔடதமாம்
அன்பாய் தமிழைப் படிப்போம் நாம்.

RangaRakes tamilnavarasam.com

## கடவுள் பாட்டு.

அருள் புரிவாய் கருணைக் கடலே
ஆருயிர் அனைத்தும் அமரவாழ்வு பெறவே (அ)
அருணோதயம் போல் ஆத்ம சாந்தியும்
அறிவு உண்மையென்று தெளிவும் தருவாய்
ஈருமயிர் வாழும் கருணை மாமழையே
தங்கலை கொங்கிடும் மங்களம் பொங்கவே
பரிபூரண ஆனந்த வர்ரியே
பக்த ரெக்ஷகனே பரமாத்மனே (அருள்புரிவ

RangaRakes tamilnavarasam.com

அ என்பவன் அத்திப் பழம் என்றான்

ஆ என்பவன் ஆசைப் பட்டான்

இ என்பவன் இதோ என்றான்

ஈ என்பவன் ஈ என்றான்

உ என்பவன் ஊதி என்றான்

ஊ என்பவன் ஊதி விட்டான்

எ என்பவன் எனக்கு என்றான்

ஏ என்பவன் ஏது என்றான் .

ஐ என்பவன் ஐயா என்றான்

ஒ என்பவன் ஒன்று என்றான்

ஓ என்பவன் ஓடி விட்டான்

ஔ என்பவன் ஔவைக் கொண்டான்.

RangaRakes tamilnavarasam.com

குடியரசு தினமதில் கூடியாடுவோம்
எல்லோரும் பாடிடுவோம் .
எல்லோரும் ஆடிடுவோம் (குடியரசு)
அன்னியர் ஆட்சி போயினத்
அல்லல் நீங்கிற்றே
ஆனந்தமாகப் பாடுவோம்
ஆனந்தமாக ஆடுவோம் (குடியரசு)
காவி நிறம் திறையனைத்த நினைப்பையூட்டுதே
வெண்மை நிறம் உண்மையை எடுத்துரைக்குதே
பச்சை நிறம் செழுமை நிலையைக் காட்டுதே
கட்டளையைச் சக்கரம் இசைக்குதே (குடியரசு)

RangaRakes tamilnavarasam.com

Song 'கும்மிப் பாட்டு'

பார் புகழ் பரிமளிக்கும் இந்திய நாடு - இந்தப்
பாரத தேசமெனும் இந்திய நாடு
சீர்பெற்று சிறந்தோங்கும் இந்திய நாடு - தாய்
சீமையெல்லாம் போற்றுகின்ற இந்திய நாடு
முப்பக்கம் கடல் சூழ்ந்த இந்திய நாடு - இன்று
முன்னேற்றம் அடைந்துவரும் இந்திய நாடு
தப்பெதுங்கள் செய்தறியா இந்திய நாடு - என்றும்
தர்மத்தையே போதிப்பது இந்திய நாடு
காவிரியும் கங்கையும் சூழ் இந்திய நாடு - எங்கும்
சாந்தியைப் பெற்றெடுத்த இந்திய நாடு
வெள்ளை மனம் படைத்தவர்கள் இந்தியர்களே
வெள்ளையனை விரட்டிவிட்ட இந்தியர்களே.

(பார் புகழ்)

RangaRakes tamilnavarasam.com

மெட்டு 'எங்காளும் வாழ்விலே' என்ற இசை.

அன்பான தோழரே அஞ்சாத வீரரே -
அன்பாலே அனைவரையும் ஆளுகின்ற அன்னை லங்கை
கண்ணிலே காணுகின்ற காட்சியெங்கும் நீ நிறைந்தாய்
உன்னாலே எங்கள் கல்விச்சோலை மீண்டும்
கிடைத்ததோர் செல்வமென்று கூறுகின்ற தோழரே.
உங்களைப்போல் தரணியதில் யாருமில்லையே

(அன்பான தோழரே)

மாந்தருள் மாணிக்கமாய் வாழும் அன்பு ஜோதியே - நீ
ஊரெல்லாம் ஓய்ந்தபோதும் நீ உறங்கி ஓய்வதில்லை.
பல்லாண்டு வாழ்கவென பாடிமகிழ்வோம் நாங்களே
இறைவனருளால் நீர் வாழ்க வாழ்க வாழ்கவே.

RangaRakes tamilnavarasam.com

தேக்குமரக் கட்டை வெட்டி தீமையில்லா மாட்டை பூட்டி
நிலத்தினை நாற்றுப்போடு செல்லத்தம்பி — உனக்கு
துணிக்குப் பஞ்சம் ஏதும் இல்லை தொழில் தம்பி
ஆதாரக் கல்வியிலே ஆராய்ச்சி செய்து தந்த
அடிப்படையை உணர்ந்து கொள்ளு செல்லத்தம்பி
நீயும் அறிஞனாக உயர்ந்திடுவாய் தொழில் தம்பி
ஆழமாக நிலத்தைக் கீறி ஆராய்ந்து உரம் உதறி
அதற்குத் தகுந்த விதையைப்போடு செல்லத் தம்பி
நீ வேகமாக உயர்ந்திடுவாய் செல்லத் தம்பி

RangaRakes tamilnavarasam.com

தாலாட்டு நாட்டுப்புறப் பாடல்

வெள்ளை வெள்ளை சீலைக்காரி
வெள்ளரிக்காய் கூடைக்காரி
கொம்பை மேல வெள்ளரிக்காய்
கொண்டு வாடி தின்னு பார்ப்போம்
அள்ளிச் செவுத்து
அர்ச்சுனனுக்குக் காது குத்தி
இந்தி செவுத்து
செல்வனுக்குக் காது குத்தி
என்னு ஆருக்கலாமா
ஊர்கர் காய் முன்னூறும்
பாக்கு பதின் கலமாம்
பச்சரிசி முக்கலமாம்
கட்டி கலந்துடனே
சர்க்கரையை அள்ளிப் போட்டு
கொட்டிக் குலக்கரைக்கும்
தோழருக்கு காது குத்த

RangaRakes tamilnavarasam.com

ராகம்: ஸாவேரி மயில் பாட்டு அபிநயப் பாட்டுக்கள்

1. ஆடு மயிலே எழுந்தாடு மயிலே
அழகிய தோகை விரித்தாடு மயிலே
வானம் கறுத்ததென்று ஆடு மயிலே
தானம் பெருத்ததென்று ஆடு மயிலே
மேகம் பொழியுமென்று ஆடு மயிலே
தாகம் தணியுமென்று ஆடு மயிலே
வானம் மழைபொழிய ஆடு மயிலே
வண்ணப் பயிர் செழிக்க ஆடு மயிலே.

RangaRakes tamilnavarasam.com

Song

சூரியன் உதிப்பது காலை
நீ தூக்கி வைப்பது காலை
சூரியன் மறைவது மாலை
நின் சுவாமி அணிவது மாலை
எலிகள் தோண்டிய வளை
நீ ஏணி ஓடிய வளை
நம்ப வீட்டு ஆடு
நாமம் போட்டு ஆடு
பானை உடைந்த ஓடு
நீ பள்ளியில் சேர ஓடு.

RangaRakes tamilnavarasam.com

Song

குட்டைக் குட்டைக் கத்தரிக்காய்
குண்டுக் குண்டுச் சுண்டைக்காய்
நெட்டை நெட்டை முருங்கைக்காய்
நீண்டு தொங்கும் புடலங்காய்
சுட்டிபானை போலவே
தடித் திருக்கும் பறங்கிக்காய்
பட்டைப் போட்ட வெண்டைக்காய்
பச்சை நிறப் பாகற்காய்
சொட்டை இல்லா கீரைகள்
சொக்கும் நல்ல தக்காளி
வாட்ட சாட்ட வாழைக்காய்
வந்துபார் என் தோட்டத்தில்.

RangaRakes tamilnavarasam.com

Song

நாட்டுக்கு அழகு வளமை

நாவிற்கு அழகு இன்சொல்

வீட்டுக்கு அழகு வெளிச்சம்

வீதிக்கு அழகு ஒழுங்கு

காற்றுக்கு அழகு பொம்மை

கடலுக்கு அழகு அலைகள்

ஆற்றுக்கு அழகு ஓட்டம்

ஆணுக்கு அழகு வீரம்

பெண்ணுக்கு அழகு கற்பு

பேச்சுக்கு அழகு உறுதி

கண்ணுக்கு அழகு கருணை

காவிக்கு அழகு அடக்கம்

ஜலத்திற்கு அழகு சப்தம்

சங்குக்கு அழகு வெண்மை

நிலத்திற்கு அழகு விளைவு

நெற்றிக்கு அழகு திலகம்

RangaRakes tamilnavarasam.com

Song நடனம்

பார் பார் பார் அந்தப் பறவையைப் பார்

பக்கம் வந்து மெல்ல மெல்லப் பறப்பதைப் பார்

பார் பார் பார்

பலநாள் பழகிய பறவையைப் போல்

பக்கம் வந்து மெல்ல மெல்லப் பறப்பதைப் பார்

பார் பார் பார்

காவிரிக் கரையின் கரைகளைக் காணவா

காடுமலை யாவையுங் கொண்டு

வரவர பலநாள் பழகிய பறவையைப் போல்

பக்கம் வந்து மெல்ல மெல்லப் பறப்பதைப் பார்

பார் பார் பார்.

RangaRakes tamilnavarasam.com

அப்பா தந்தது வாய்பாடு

அம்மா போட்டது சாப்பாடு

அண்ணன் ஓட்டுவது மோட்டாரு

அண்ணி வைப்பது சாம்பாரு

பாட்டன் அடித்தது பாம்பு

பாட்டி இடித்தது சம்பு

தம்பி செய்வது பள்ளி

தங்கை கேட்பது சங்கி

RangaRakes tamilnavarasam.com

Song      களை எடுத்தல்

'வாங்க மச்சான் வாங்க' என்ற இசை

வாங்க அண்ணே வாங்க – அந்த
வரப்பு தாண்டி வாங்க
விளைச்சல் நல்லா விளைய
களை எடுக்க நீங்க வாங்க.

RangaRakes tamilnavarasam.com

Song புடலங்காய்ப் பாட்டு.

பச்சைப் பச்சைப் புடலங்காய்
பாம்பு போலப் புடலங்காய்
பாம்பு போன்ற புடலங்காய்
பந்த லுள்ளே தொங்குதே
ஆரஞ்சுப் பழ நிறத்தைப் போல்
அழகு புடலம் பழத்தைப் பார்
கொஞ்சம் அதிகம் பழுத்திடின்
கொடி கொழைந்து வீழ்ந்திடும்
புடலம் பழத்தின் விதையைப் பார்
புதைந்து கிடக்கு சுளைக்குள்ளே
சுளையைப் பாரு விதைக்குமேல்
தோய்ந்து போன இரத்தம் போல்
அழகு விதையை எடுத்து வை
அடுத்த வருஷம் போடலாம்.

RangaRakes tamilnavarasam.com

# [illegible] பையன் பாட்டு.

பையன் வந்தான்
பாட்டும் பாடினான்
குமரி வந்தாள்
குலுக்கி ஆடினாள்
குமரியைப் பார்த்துக்
கிழவனும் பொங்கிக்
கிழவி ஆடினாள்
கீழே விழுந்தாள்
தைதை தாத்தா
தடுக்கிட்டு விழுந்தார்
கைப்பயல் கண்டான்
கைகொட்டிச் சிரித்தான்
கிழவனுங் கிழவியுங்
கிடந்ததைக் கண்ட
அம்மா நொருங்கியே
ஐயையோ என்றாள்
அடியேன் ஓடுறான்
ஆபத்துக்கு உதவினேன்.

RangaRakes tamilnavarasam.com

கோரு நடனம்

எங்கள் நாட்டிற் கிந்த நாடு ஈடு
பேரின்பமான வீடு (எங்கள்)

1. கங்கை யமுனை பொருனை காவிரியும் பாயும்
தீங்கரு பெய்மாரி பெய்து தீங்கழனி ஓங்கும்

2. வானோர்களும் தம்மையுணர வந்துதித்திடும் நாடு
பூஜையுயிர் போயினும் தன் உறுதி நாட்டும் நாடு (எ

3. கானம் கலைஞானம் தவஞானம்தரும் நாடு
மானிற் சிவரி மானைப் போல மாதர் வாழும் நாடு (எ

4. தென்தமிழ் தேனும் தரும் வள்ளுவரின் நாடு
அன்னையும் கவி ஔவை கம்பன் அவதரித்த நாடு
சாந்திதனில் நீந்தும் உயர் காந்தி மகான் நாடு
நேர்ந்த வீரர் நேதாஜி கூறும் எங்கள் நாடு

(எங்கள்)

RangaRakes tamilnavarasam.com

Song மூக்கன் பாட்டு.

எங்கே வாடா மூக்கா
ஏண்டா புடிக்கிறே காக்கா
அதுதான் இல்ல போக்கா
எண்ணிப் பாரு மாக்கா
கூழைக் கும்புடு போடறே
சொத்துக் கிழிவு தேடறே
கும்பிடத்தான் திட்டமா
கூலி வேலை மட்டமா
கும்பகோணம் போகலாம்
கூலிக்காரன் ஆகலாம்
நாளும் மூட்டை தூக்கலாம்
நல்லா கூலி கேட்கலாம்
காசு பணத்தைப் பெருக்கலாம்
கண்ணியத் தோடு இருக்கலாம்.

RangaRakes tamilnavarasam.com

Song

தலைவாரி பூச்சூடி உன்னை - பாட
சாலைக்குப் போவென்று சொன்னாள் உன் அன்னை
சிலைபோல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்
விலையேட்டு வாங்கவா முடியும் - கல்வி
வேளைதோறும் கற்றுவருவதால் படியும்
மலைவாழை அல்லவோ கல்வி - நீ
வாயார உண்ணுவாய் போவென் புதல்வி
படியாத பெண்ணாய் இருந்தால் - கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்
கடிகாரம் ஓடும் முன் ஓடு - என்
கண்ணல்ல அண்டைவீட்டுப் பெண்களோடு
கடிதாய் இருக்கும் இப்போது - கல்வி
கற்றிட கற்றிட தெரியும் அப்போது
கடல் சூழ்ந்த இந்தத் தமிழ்நாடு - பெண்
கல்வி பெண்கல்வி என்றே படித்திடு.

RangaRakes tamilnavarasam.com

'நிலவே நிலவே வாராயோ'

நிலவே நிலவே வாராயோ
நீந்தும் நிலவே வாராயோ (நிலவே)
பொறுமை எண்ணம் உனக்கில்லை
பட்டம் பதவி உனக்கில்லை
சிறுமை கொண்ட மனிதரைப் போல்
சீறும் தன்மை உனக்கில்லை.
சிங்கார உந்தன் வடிவத்தை
சிறுவர் கண்டு துள்ளுகிறார்
எங்கும் சுற்றி வருகின்றாய்
ஏனோ எம்மிடம் வரமாட்டாய் (நிலவே)

RangaRakes tamilnavarasam.com

கதை 'சிட்டே'

சிட்டே சிட்டே ஓடிவா!
சீக்கிரமாய் பறந்து வா
எட்டியெட்டி நிற்பதேன்
என்னைக் கண்டால் அச்சமா
கீச்சுக் கீச்சு என்று நீ
கிட்டக் கிட்ட ஓடிவா!
நித்தம் நித்தம் வருகுவாய்
நிறைய நெல்லைத் தருகுவேன்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்
குதித்துக் குதித்து ஓடிவா!

RangaRakes tamilnavarasam.com

# காகமும் குடமும்

தாகம் தாகம் என்று சுற்றிக்
காகம் ஒன்று பறந்ததாம்
தண்ணீர் எங்கும் கிடைத்திடாமல்
தாவி தாவிப் பறந்ததாம்
கூரை வீட்டுக் கொல்லைப்புறம்
குடம் ஒன்று கண்டதாம்
கொள்ளை இன்பம் பொங்கவே
குந்தி அதைப் பார்த்ததாம்
நீர் அடியில் இருந்ததால்
காகமும் சோர்ந்தது.
நீண்ட பெருமூச்சு விட்டு
சிந்தனையும் செய்ததாம்
சிந்தனையின் ஆற்றலால்
வந்ததொரு யோசனை
சின்னச் சின்ன கற்களை
பொறுக்கிக் குடத்துள் போட்டது
வந்தது தண்ணீர் மேலே
தாகம் தீர குடித்தது
வாய்விட்டு காகாவென்று
[illegible]விட்டுப் பறந்தது

RangaRakes tamilnavarasam.com

# என்ன செய்ய வேண்டும்?

தலையே! உலகின் நீதிக்குத்
தாழ்ந்து பணிந்திட வேண்டும்
கண்ணே! பார்க்கும் பார்வையிலே
கருணை பொழிந்திட வேண்டும்
காதே! நல்ல வார்த்தைகளைக்
கருத்தாய் கேட்டிட வேண்டும் நீ
வாயே! உள்ளம் குளிர்ந்திடவே
வார்த்தை கூறிட வேண்டும் நீ
மூக்கே அன்பு விருதலையே!
மூச்சாய் வெளியிட வேண்டும் நீ
வயிறே ஏழை மனங்குளிர
வழங்கி உண்ணுதல் வேண்டும் நீ
கையே! கட்டப் படுவோர்க்கு
கைகொடுத்துதவிட வேண்டும் நீ
காலே! நல்ல செயல் செய்ய
கடிதில் நடந்திட வேண்டும் நீ
உடலே உலகப் புகழ் என்னும்
உடலை நாட்டிட வேண்டும் நீ.

— அழ. வள்ளியப்பா.

RangaRakes tamilnavarasam.com

# பனைமரம்.

1. பனைமரமே! பனைமரமே
ஏன் வளர்ந்தாய் பனைமரமே!
நான் வளர்ந்த காரணத்தை
நாட்டாரே சொல்லுகிறேன்

2. படுக்க நல்ல பாயாவேன்
பஞ்சணைக்கு நாராவேன்
அடுக்கடுக்காய் பாளைகளை
அடுக்கி வைக்க உரியாவேன்

3. சித்திரைக் கோடையிலே
சிறந்த நுங்கை நான் தருவேன்
எத்திசையில் உள்ளவர்க்கும்
இயலுதவி செய்திடுவேன்

4. பசித்து வந்த மக்களுக்குப்
பனம்பழமும் தந்திடுவேன்
புசிக்க நல்ல கிழங்காவேன்
புது விசிறி உதவிடுவேன்

5. என்னைப்போல் யாவருமே
இயலுதவி செய்வீரேல்
பொன்னைப் போல் எல்லோரும்
போற்றிடவே வாழ்ந்திடலாம்.

RangaRakes tamilnavarasam.com

## முயலும் ஆமையும்

1. முயல் வேகமாய் ஓடும். ஆமை மெதுவாய் நடக்கும். அதனால் ஒரு முயல் ஒரு ஆமையைக் கேலி செய்தது. ஆமை "அண்ணே நீ என்ன ஏளனம் செய்கிறாய். ஓடுவது உன் இயல்பு. நடப்பது என் இயற்கை. உன்னைப் போல் நான் படபடப்பு உடையவன் அல்லேன்; அமைதியாகவே நடந்து என் வேலைகளில் வெற்றி கொள்வேன்." என்று கூறியது.

2. முயல், "தம்பி! என்ன ஓட்டத்தில் வெல்ல உன்னால் இயலுமா? நாம் பந்தயம் கட்டுவோம், ஓடுவோம். யார் வெல்கிறோம் என்பதைப் பார்ப்போம். என்ன சொல்கிறாய்" என்றது. ஆமை "அப்படியே செய்வோம்" என்றது.

3. அப்போது ஒரு நரி வந்தது. முயல் அதைப் பார்த்து "அண்ணே நாங்கள் பந்தயத்தில் ஓடுவோம். நீ பந்தயத்தின் முடிவை தெரிவிக்க வேண்டும்" என்றது. நரி உடன் பட்டது.

4. முயலும் ஆமையும் ஓரிடத்தில் நின்றன. நரி தூரத்தில் இருந்த ஒரு மரத்தைக் காட்டி "நான் அம் மரத்தின் அருகில் நிற்பேன். நான் ஊளையிடுவேன். அதைக் கேட்டதும் நீங்கள் ஓடிவர வேண்டும். முதலில் என்னைத் தொடுபவரே

RangaRakes tamilnavarasam.com

வெற்றி பெற்றவர்?" என்று சொல்லி, அம்மரத்தின்
அருகில் ஓடி நின்றது.

5. நரி ஊதிவிட்டது. முயல் விரைந்து ஓடியது
ஆமை நடந்தது. பாதி தூரம் ஓடியதும் முயல் திரும்
பிப் பார்த்தது. ஆமை நெடுந் தூரத்தில் வரக்
கண்டது. "ஆமையா என்னை வெல்லும்" நாம் "சிறிது
நேரம் ஓய்வு கொள்வோம்" என்று நினைத்தது. அது
ஒரு புதரில் தங்கியது. விரைந்து ஓடியதால் அதற்குச்
சோர்வு உண்டாகியது. அது படுத்து உறங்கிவிட்டது.

6. ஆமை தன் வழக்கப்படி நடந்து வந்து நரியைத்
தொட்டுவிட்டது. தூங்கி எழுந்த முயல் வேகமாய்
ஓடிவந்தது. அதைப் பார்த்த நரி சிரித்தது. ஆமையே
வென்றது. முயல் தோற்றது.

RangaRakes tamilnavarasam.com

வெள்ளி நிலா வா வா
விளையாட நீ வா
நல்ல பாட்டுப் பாடுவோம்
நாம் ஓடி யாடுவோம்
ஒன்று இரண்டு மூன்று
ஓடிவா இன்று
நல்ல பாட்டு பாடுவோம்
நாம் ஓடி யாடுவோம்
நான்கு ஐந்து ஆறு
நின்னும் எண்ணைப் பாரு
ஏழு எட்டு ஒன்பது
ஏன் அங்கே நிற்பது
பத்து நூறு ஆயிரம்
பறந்து வா

RangaRakes tamilnavarasam.com

விழாவை மகிழ்வொடு காண வந்தவரே
வணக்கம் புரிந்தோம் – உலகில்
எழுத்தைக் கொண்டதனால் இறைவனானவரே
வணக்கம் புரிந்தோமையா – நல்
வணக்கம் புரிந்தோமையா.
அலுவல் செய்ததனால் அயர்ந்து தளர்ந்தோரே
வணக்கம் புரிந்தோமையா – நல்ல
வணக்கம் புரிந்தோமையா.
கவிஞர் கலைஞரே கைத்தொழிலாளரே
வணக்கம் புரிந்தோமையா – நல்
வணக்கம் புரிந்தோமையா
பணியைத் தவறாது பாரில் செய்பவரே
வணக்கம் புரிந்தோமையா – நல்
வணக்கம் புரிந்தோமையா – நல்ல
வணிகர் முதலாக வருகை தந்தவரே
வணக்கம் புரிந்தோமையா – நல்
வணக்கம் புரிந்தோமையா.
பணிதனைத் திகழ் மாணவர்களே

RangaRakes tamilnavarasam.com

வணக்கம் புரிந்தோமப்பா - செல்வ

அணிகொள் மாதர்காள்! அருமை அன்னைகாள்

வணக்கம் புரிந்தோமையா - நாஸ்

வணக்கம் புரிந்தோமையா (விழாவை)

RangaRakes tamilnavarasam.com

மயில் போல் ஆடுவேன்

மான் போல் ஓடுவேன்

குயில் போல் பாடுவேன்

குருவி போல் தேடுவேன்

பூனை போல் பதுங்குவேன்

புலி போல் பாய்வேன்

சிங்கம் போல் வாழ்வேன்

இறுதியும் நான் ஆள்வேன்

RangaRakes tamilnavarasam.com

மாமா மாமா மாமாத்துச் சோலை
நீ வந்த வேளை கம்பந் சோறு
கத்தரிக்காய் சாம்பாறு கரைத்துக் குடி
கடலை வாங்கித் திங்க காசு கொடுங்க மாமா

RangaRakes tamilnavarasam.com

காப்பு: பெண்கள் விடுதலைக் கும்மி.

1. கும்மியடி தமிழ்நாடு முழுவதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி (கும்மியடி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மியடி)

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார் - அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி (கும்மியடி)

நல்ல விலைகொண்டு நாயை விற்பார் - அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழிகூட்டி விட்டார் (கும்மியடி)

கற்புநிலையென்று சொல்லவந்தார் ~~[illegible]~~ இரு
கட்சிக்கும் அதை பொதுவில் வைப்போம்.

RangaRakes tamilnavarasam.com

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் (கும்மிய
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி (கும்மிய

RangaRakes tamilnavarasam.com

பார் பார் பக்கம் வந்து மெள்ள
மெள்ள பறப்பதைப் பார்
நடனங்கள் புரிவேன்
நல்லிசை பாடுவேன்
நல்ல நல்ல கீதங்கள்
செய்து தருவேன்
பலநாள் பழகிய பறவையைப் போல்
பக்கம் வந்து மெள்ள மெள்ள
பறப்பதைப் பார்
காவேரி நதியின் கரைதனில் ஆடலாம்
காடுமேடு யாவையும் சுற்றி வரலாம்
பலநாள் பழகிய பறவையைப் போல்
பக்கம் வந்து மெள்ள மெள்ள பறப்பதை பார்.

RangaRakes tamilnavarasam.com

எலியும் தவளையும் வெகு நட்புடனாய்
கலந்து வால்களை கயிற்றால் கட்டிக் கொண்டது
கட்டிக் கொண்டபின் களித்துத் திரிகையில்
பக்கமிருந்த குளத்தில் தவளை பாய்ந்து குதித்திட
திக்குமுக்கிட்டு எலி செத்து மிதக்கவே
பக்கமிருந்த பருந்து ஒன்று பாய்ந்தது எலியை
தூக்கிச் செல்கையில் தலை தொங்கும் தவளையும்
போக்கில்லாமல் பருந்தி[illegible] புசிக்கப் பட்டது.
யாரும் தீதினை மிக எளிதில் உணரலாம்
சேரவொண்ணாதவர் சிநேகம் செய்யும் தீங்கினை.

RangaRakes tamilnavarasam.com

'வாராயோ வெண்ணிலாவே' என்ற இசை.

பொன்னான இந்திய நாளோ
பொங்காதோ இன்பக் கடலே (பொன்னான)
அயலார் ஆண்ட நம் தேசம்
அடிமையான நம் வாசம்
மறைந்தது வெள்ளையர் ஆட்சி
மலர்ந்தது சுதந்திர குடியரசாட்சி (பொன்னான)
சூழ்ந்திடும் இருளின் இடையில்
சுதந்திர சூரியன் உதயம்
சுடரொளி ஜோதியினாலே
சோபிதம் சேர்ந்திடுவோம். (பொன்னான)
நாற்பத்தெட்டு ஜனவரி மாதம்
ஆனதொரு இருபத்தாறில்
பூரண நிலவொளி வீச
புலர்ந்தது குடியரசாட்சி (பொன்னான)

RangaRakes tamilnavarasam.com

'சும்மாயிருந்தால் சோத்துக்கு நஷ்டம்' என்ற இசை.

படிக்காதிருந்தால் அறிவுக்கு நஷ்டம்
படித்துவிட்டால் பின்பு ஏற்படும் இன்பம்
கஷ்டப்பட்டுப் படிக்கோணும் தானே தன்னன்னு
கவனமாகப் படிக்கோணும் தானே தன்னன்னு.
காலையில் எழுந்து கடனையும் முடித்து
கவனத்தை யெல்லாம் படிப்பினில் செலுத்தி
நூலை கையில் எடுத்துக் கொண்டு
பள்ளி நோக்கி செல்வதே சிறப்பு.
பள்ளி நோக்கி செல்வோமே தானே தன்னன்னு
கல்வி நன்றாய் கற்போமே தானே தன்னன்னு.
அன்னை தந்தை குருவின் பாதம்
அனுதினம் சென்று போற்றி பணிவீர்
கண்ணைப் போன்ற கல்வி வளர
பெரியோர்களின் சொற்படி நடப்போம்.
ஆயிரம் பேர்கள் நடுவிலே - தானே தன்னன்னு
அழகு பாலை ஆடிக் கொள்வோம் தானே தன்னன்னு

RangaRakes tamilnavarasam.com

'இவர் சிரிப்பார் இவர் அழுவார்' என்ற அசை.

இவர் சிரிப்பார் இவர் அழுவார்
நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்.
1. பஞ்சாயத்து யூனியன் போகும் — அந்தப்
பாதையில் புதுமைகள் தோன்றும்
உயர்வை எண்ணி சிரிக்கின்றேன்
உழல்வதை எண்ணி அழுகின்றேன்
(இவர்...)
உரிமை பெற்றிடும் என்று அறிகின்றேன்
2. கடமை பெற்றிடும் நாமே
காந்தியின் பாதையில் தானே.
அமைதியை பெற்றே வாழுகின்றோம் — அனுதினம்
காந்தியை தொழுகின்றோம். (இவர்...)
3. பஞ்சாயத்து யூனியன் தோன்றும் — பல
பண்பாட்டு நாட்டினில் தோன்றும் — வறுமையை
போக்கி வாழ்கின்றோம்.
பெருமையுடைய பணிகளில் பெருகின்றோம்.

RangaRakes tamilnavarasam.com

'ஏர்முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை' என்ற ...
பாரதிக்கு நேர் என்றும் இணையே இல்லை
பாடலுக்கோர் எந்த எல்லையே இல்லை

1. அறிவு கொண்டார் ஆற்றல் பெற்றார் அந்நாளிலே
சொந்தமாக ஒத்துழைத்தார் சாந்தி நாளிலே
புரட்சி செய்தார் வீரங்கொண்டார் வையங்கா...
வேதனையும்தான் அடைந்தார் அந்நாளையிலே (பார...

2. அன்பு மயம் கொண்டவரே பாரதியாரே - அவர்
அகிம்சையிலும் நேர்மையிலும் இறந்ததினாலே
ஏழையென்றும் அடிமையென்றும் வேறுபாடில்லையே
என்ற பாட்டை பாடினவர் பாரதியாரே (பார...)

3. அரண்டல் நீக்க பாடுபட்டார் தேசத்திற்காக
துன்பம் பலவும் யாவும் அனுபவித்தார் நம்மவர்க்காக
மேடைப் பேச்சினிலே புரட்சி செய்தார் இரத்தம் ...
மேன்மை பெற்றிடும் அவர் அடைந்த இன்னல்களால் (...

4. வீடுதோறும் பள்ளி வேண்டும் தீமை விரட்ட
வேலை தேடி அலைபவரை பயிர்செய்ய விரட்ட
• இன்னல்கின்ற பிள்ளைகட்கு பாட்டுப் பாடினார்
• தீயவரை விரட்ட புலவர் கூட்டம் ...

RangaRakes tamilnavarasam.com

'மின்ஜாக் கனியமுது ஒன்று' என்ற கதை.

உலகின் தவமணியே நம் ஜவஹர்லாலே - நல்
உத்தமனே உன்மேலே அன்பினாலே
உன்னுடன் தந்திடுவோர் பாமாலே
உளக்கருடன் பாடுவோர் உன்னைப் போற்றியே
பஞ்சசீல இருவே பண்பின் சிறு குருவே
பாரினுக்கு நீதானே நேருஜீ நீயே (உலகின்)
அல்லும் பகலும் ஓயாது உழைக்கும் தீரனே
மாந்தரின் மாணிக்கமாய் திகழும் வீரனே
தீர்ந்தோர் பாமாலை அன்பினால் தானே
அமைப்பின் நல் வாழ்வினிலே இவ்வுலகிலே (உலகின்)

RangaRakes tamilnavarasam.com

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலிதீர்த்தே உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்
பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே
அள்ளி அணைத்திடவே என் முன்னே
ஆடி வரும் தேனே.
ஓடி வருகையிலே கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால்
உன்னைப் போல் ஆவி தழுவுதடி
உச்சிதனை முகர்ந்தால் கருவம் ஓங்கி வளருதடி
மெச்சி உன்னை ஊரான் புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி
கன்னத்தில் முத்தமிட்டால்
உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா

RangaRakes tamilnavarasam.com

உன் மத்தமாகுதடி

உன் கண்ணில் நீர் வழிந்தால்

என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி

உன் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா

என்னுயிர் நின்னதன்றோ.

RangaRakes tamilnavarasam.com

கும்மி.

சிங்காரமும் வேணுமென்றால் நந்தவனந் தனிலே
ஆட வாரீர் ஒன்றாய் கூட வாரீர்
நந்தவனந்தனிலே நல் மலர்களை பூத்துக்
குலுங்கும் அழகை காணவாரீர்
வாரும் தோழிகளே அருமைத் தோழிகளே
மல்லி முல்லை சைம்பை மாலையுடன்
ரோஜா மலர்ந்து மணம் வீசப் பாரீர்
நல் மயிலினங்கள் தோகை விரித்தாடிட
மாங்குயில் இன்னிசைக் கீதம் பாடிடவே
வாரும் தோழிகளே அருமைத் தோழிகளே
கொடியிலே மலரை ஒன்றாகச் சேர்த்திடுவோமே
நல்ல மலர்களையே மாலை தொடுத்திடுவோம்.
அன்பான அன்னையின் பாதம் பணிந்திடுவோம்.
வாரும் தோழிகளே, அருமைத் தோழிகளே.

RangaRakes tamilnavarasam.com

1. நந்த வனத்தில் சுந்தரமாய் நறுமலர்களை நாம்
கொய்திடுவோம் சுந்தர பிருந்தவனந்தனிலே
சொகுசுடன் கூடி விளையாடுவோம்.

2. கம கமவென்று வீசும் குண்டு மல்லி
கிம கிம வென்று வீசும் குண்டு மல்லி

3. கோடிப் பூக்களும் கூடிக்கூடி சுந்தரமாகவே
கொஞ்சுகின்றன
சந்திரன் தன்னொளியை ஜொலிக்கின்றதே
கூடி விளையாடுவோம்.

RangaRakes tamilnavarasam.com

கும்மி

1. சோலை சிங்காரமும் சோலை சிங்காரமும்

சோலை தரும் மலர் ஆனந்தமும்

எத்தனை மயில்கள் அங்கே நர்த்தனம் ஆடுது

2. இன்பமாய் கூடி ஆடிப் பாடியே

களித்திடுவோம் நாமும்

தோழிகளே நாமும் நல்ல மலர்களைக் கொய்தி

3. நாடு செழித்திட நாமும் உயர்ந்திட

இறைவனை வேண்டிடுவோம்

பாரத நாட்டினிலே நல்ல மாந்தராய் திகழ்வோ

RangaRakes tamilnavarasam.com

கும்மி

1. அந்தமிகும் நந்தவனம் காட்சி ஈதுவே
சொந்தமிகும் தோழிகளே காண்பீர் ஈதுவே
மந்த மாருதம் மகிழும் வீசுகின்றதைப் பார்.

2. பசுமையான பசுங்கொடிகள் படர்ந்திருப்பதைப் பார்
விண்மீன் போல மலரினங்கள் மலர்ந்திருப்பதைப் பார்
தேனை உண்ணும் பூச்சினங்கள்
புகுந்து செல்வதைப் பார்
அங்குமிங்கும் அசைந்திடும் அழகையுமே பார்

3. தோழிகளே நாமெல்லாரும் கூடிடுவோமே
ஓடியாடி ஒன்றாய் நாமும் சேர்ந்திடுவோமே
ஒன்றாய்க் கூடி கும்மியடித்திடுவோமே
கைவளையல் குலுங்க நாமும் கும்மியடிப்போமே.

RangaRakes tamilnavarasam.com

கும்மி

நம் நாட்டில் நம் நாட்டில்
நமது சொந்த நாட்டில்
சுக வாழ்வினையே காண்போமே
சிந்து கங்கை யமுனை காவேரி
பாயும் நாட்டில்
கல்வி கலை ஓங்க
கலைக் கூடம் அமைத்தல் வேண்டும்
அளவோடு உண்ணவேண்டும்
அறிவோடு வாழவேண்டும்
ஆசானைப் பணிய வேண்டும்
அவனியைக் காக்க வேண்டும் - அறிவை வளர்க்க
நம் மடமை ஒழியவேண்டும்
பூவுலகில் நாமும் புகழுடன் வாழவேண்டும்.

RangaRakes tamilnavarasam.com

## ஆண்டவன் அருள் வேட்டல்.

அன்பின் வடிவமாம் ஆண்டவனே
அடியேன் அருளை வேண்டுவேனே
இன்பம் வாழ்வில் எய்திடவே
இனிதே அருள் நீ செய்திடவே
நாட்டில் நலனை நாட்டிடவே
நலியும் பகையை ஓட்டிடுவாய்
வீட்டில் இன்பம் தேக்கிடுவாய்
வெளியில் துன்பம் நீக்கிடுவாய்

– கே.வீ.வேணுகோபாலப் பிள்ளை

RangaRakes
tamilnavarasam.com

# விடுகதைகள்

1. தென்னையைப் போல் வேரோடும்
தேன் மதுரை (பூ) பூக்கும்
வாழையைப் போல் மடல் விரியும்
ஈட்டியைப் போல் இலை இருக்கும். - இதுஎன்ன?

விடை : கத்தாழைச் செடி.

2. இருட்டறையில் தன்நிறத்தை எடுத்துக்காட்டும்
காய்ந்தாலும் நனைந்தாலும் கசங்கிவிடாது
நுரையாக மாறிவிட்டால் முகம் மலரும்
மெய்க் கிழவால் கைவிரல் முன்னே நிற்கும். இதுஎன்ன

விடை : சுண்ணாம்பு.

3. பூத்துவிட்டால் மல்லிகை போலிருக்கும்
காய்த்து விட்டால் ஒன்றுக்கும் உதவாது
பழுத்து விட்டால் உவமைக்கு எடுத்துக்காட்டு
வருகவரும் அன்பர்க்கு விருந்துமாகும். இதுஎன்ன

விடை : கொவ்வைப் பழம்.

4. தட்டுத் தின்னும் தானுந் தின்னும் செம்புறிக்காரி
நீர்ப்பட்டால் செத்துப்போகும் செம்மறிக்காரா.
இதுஎன்ன?

RangaRakes tamilnavarasam.com

6. இரவில் பூத்திருக்கும் மல்லிகை
சாலையில் காணவில்லை
கதிரவன் மறைத்துவிட்டான்
எக்காலத்திலும் அதைப் பறிக்க முடியாது.
அது என்ன?

விடை : நட்சத்திரம்

6. வேடிக்கைக் கணக்கு

1. ஓர் அரசனுடைய யானை மூன்று நிலத்தில் ஒற்றைப் படையாய் மேய்ந்தது. ஐந்து வழியில் ஒற்றைப் படையாய் சென்று, ஏழு குளத்தில் ஒற்றைப் படையாய் நீருண்டு ஒன்பது கம்பங்களில் ஒற்றைப் படையாய் கட்டப் பட்டனவென்றால், மொத்த யானைகள் எத்தனை?

விடை : 315 யானைகள்

2. ஒரு குடும்பத்தில். ஒன்பது சகோதரர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கை இருந்தாள். அப்படியென்றால் அந்த குடும்பத்தில் எத்தனை பேர்?

விடை : 10 பேர். 9 ஆண் 1 பெண் : கு. ரங்கராஜ்.

RangaRakes
tamilnavarasam.com

கொடு கொடு கன்றை
கன்றின் தாயே
நின்று வைக்கும் ஆவே
ஆயன் கைக்கோலே
கோலே வளர்த்த கொடி மரமே
கொடி மரத்தின் மேல் இருக்கும் கொக்கே
கொக்கு நீராடும் குளமே
குளத்தில் இருக்கும் மீனே
மீன் பிடிக்கும் வலையா
வலையன் கைக் கலயமே
கலயம் செய்யும் குயவா
குயவன் எடுக்கும் மண்ணே
மண்மேல் இருக்கும் புல்லே
புல்லை உண்ணும் குதிரையே
என் பெயர் என்ன? எ. எ. எ. எ.

RangaRakes tamilnavarasam.com